<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>

I.D.O.P. No. 14 / 2017 (I.A. No.958 / 2017)

2018 ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் நாள் புதன்கிழமை கீழ்க்கண்ட சாட்சி வாக்குமூலம் (1965 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. பிரகாஷ், Bench Clerk அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தீபக் | தொழில் | : |
| த/பெ. \| க/பெ. | : | வட்டம் | : |
| வயது | : | கிராமம் | : |
| ஜாதி | : | மதம் | : |

<u>எ.ம.சா.1</u>

<u>முதல் விசாரணை</u>

நான் திருச்சி, சமயபுரம், கரூர் வைஸ்யா வங்கி கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வந்த சம்மன் அடிப்படையில் நான் ஆஜராகி சாட்சி சொல்கிறேன். 1.1.2015 முதல் தற்பொழுது வரை மனுதாரர் ஜோன் ஆப் ஆர்க் என்பவருடைய வங்கி கணக்கு விவரம் அடங்கிய பட்டியலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். 17.2.2017 அன்று சென்ட்ரம் டைரக்ட், திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனத்திடமிருந்து மனுதாரரான ஜோன் ஆப் ஆர்க் வங்கி கணக்கிற்கு ரூ.3,20,540/- வந்துள்ளது. சென்ட்ரம் டைரக்ட் என்ற நிறுவனமானது வெளிநாட்டு பணத்தை இந்திய பணமாக மாற்றி கொடுக்கும் பணி செய்யும் நிறுவனம் ஆகும். மேலும் 20.2.2017 அன்று மரியதாஸ் என்பவரின் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கிலிருந்து மனுதாரர் ஜோன் ஆப் ஆர்க் என்பவர் வங்கி கணக்கிற்கு ரூ.1,37,955/- வந்துள்ளது. இந்த ஒரு பரிவர்த்தனையை தவிர மரியதாஸ் பெயரில் வேறு பரிவர்த்தனை இல்லை. எதிர்மனுதாரர் ஆன்ட்ரூஸ் பிரான்சிஸ் சேவியர் என்பவர் மூலமாக மனுதாரர் ஜோன் ஆப் ஆர்க் வங்கி கணக்கிற்கு பலமுறை வரவு வந்துள்ளது. 21.2.2017 அன்று மனுதாரர் ஜோன் ஆப் ஆர்க் வங்கி கணக்கிலிருந்து ரூ.4,50,000 த்தை எடுத்து இளவர் ஜோவின்ஸ் கிரைஸ் என்பவர் பெயரில் ஒரு வருட காலத்திற்கு நிரந்தர வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிரந்தர வைப்பீடானது மேலும் ஒரு வருடத்திற்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த வைப்பீட்டு தொகைக்கு ரூ.30,000 வட்டியாக கிடைத்துள்ளது. மனுதாரர் ஜோன் ஆப் ஆர்க் என்பவரின்

எங்கள் வங்கி கணக்கு பட்டியல் சான்றிட்ட நகல் சா.சா.ஆ.1. ஆகும். மனுதாரர் ஜோான் ஆப் ஆர்க் என்பவர் இளவர் பெயரில் வைப்பீடு செய்ததற்கான பட்டியல் சான்றிட்ட நகல் சா.சா.ஆ.2., மேற்படி வைப்பீடு நீட்டிப்பு செய்ததற்கான பட்டியல் சான்றிட்ட நகல் சா.சா.ஆ.3. ஆகும்.

<u>மனுதாரர் தரப்பு கு.வி. :-</u>

செய்யப்படவில்லை.